e-ISSN: 2456-5148 Vol. 3 No. 02 KALANJIYAM (KIJTS) MAY 2024

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies

# கொங்கு வட்டார நாவலாசிரியர் மு.பழனிசாமியின் இலக்கியப்பணிகள்

**இரா.குமரவேல்,**
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி,
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்-48.

மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தும் திறவுகோலாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இலக்கியத்தில் உயிரோட்டமான கருத்தாக்கங்களைப் படைப்பாளர்கள் படைப்பதனால் அவ்விலக்கியம் காலந்தோறும் நிலைத்திருந்து சமூகத்திற்குப் பயனளிக்கிறது. இலக்கியப் படைப்பாளர்களால் படைக்கப்பெறும் அனைத்து இலக்கியங்களும் கால வெள்ளத்தில் நிலைத்திருப்பதில்லை எனலாம். விழுமிய உணர்ச்சியுடன் புதுமையான கண்ணோட்டத்தில் சமூகத்தின் மாற்றத்திற்குரிய நிலையில் படைக்கப்பெறும் இலக்கியங்கள் மட்டுமே நிலைத்திருக்கின்றன. சமூகத்தின் மறுமலர்ச்சிக்குரிய விழுமியப்பதிவுகளைக் கொங்கு வட்டார வழக்குடன் படைக்கும் படைப்பாளராக மு.பழனிசாமி அவர்கள் விளங்குகிறார்.

கொங்கு வட்டாரத்தின் உறவுநிலை மரபுகள், சடங்கியல்கள், கலாச்சாரப் பின்புலங்கள், இயற்கைச்சூழல், நகரமைப்பு முதலியவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் மு.பழனிசாமியின் படைப்புகள் அமைந்திருக்கின்றன. அப்படைப்புகளில் சமூக மாற்றத்திற்குரிய கல்வி மேம்பாடு, பெண்ணியச்சிந்தனை, நவீனத்துவக் கொள்கை, விவசாயப் பெருங்குடிகளின் தற்கால வாழ்வியல் நிலை, சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கு உண்டான வழிவகைகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. இலக்கிய உலகில் தனித்துவமான படைப்புகளின் மூலம் தன் ஆளுமையை

வெளிப்படுத்தி வரும் மு.பழனிசாமி அவர்கள் பல இலக்கிய நூல்களைப் படைத்துச் சமூக வளர்ச்சிக்குத் துணைநிற்கும் பேராளுமையாகத் திகழ்கிறார். அவர்தம் இலக்கியப்பணியின் சிறப்பினை ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**படைப்பாளர்**

கொங்கு மண்டலத்தின் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பழங்கரை எனும் கிராமத்தில் 1930 ஆம் ஆண்டு வேளாண்மரபில் தோன்றியவர். தம் இளம் வயதிலேயே தமிழ்மீது மிகுந்த ஆர்வம் கொண்டவராய் திருமுருகாற்றுப்படை முதலாய இலக்கியங்களைக் கற்றார். பின்னாளில் தமிழ்ப்பயின்று 1955ஆம் ஆண்டு பவானி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியைத் தொடங்கினார். 1958ஆம் ஆண்டு மரகதம் அம்மையாரை மணந்து இல்லறத்தை நல்லறமுடன் இன்றளவும் பேணி வருகிறார். இத்தம்பதிக்கு ஓர் ஆண்மகவும் உண்டு. ஆசிரியராக இருந்த போதிலிருந்தே விவசாயத்தையும் தொடர்ந்து செய்து வந்தார். 1990ஆம் ஆண்டு தலைமை ஆசிரியராகப் பணி ஓய்வுபெற்று, இலக்கியப்பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார். அகவைத் தொண்ணூற்றைக் கடந்த நிலையிலும் இலக்கியப் பணிகளை இன்றளவும் செய்து தமிழ்ப்பணி ஆற்றிவருகிறார்.

**மு.பழனிசாமியின் படைப்புகள்**

படைப்பாளன் தன் வாழ்வில் கண்டுணர்ந்த அனுபவத்தின் மீது கற்பனையைப் புகுத்தி அனைவரும் விரும்பும் வகையில் சுவைபட இலக்கியத்தைப் படைக்கிறான். இலக்கியச்சுவை நிறைந்த படைப்புகள் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டாலும், படைப்பாளனுடைய உள்ளத்துணர்வின் வெளிப்பாடாகிய கருத்துகள் படிப்பவனின் மனதிலும் நிழலாடினால் மட்டும் அப்படைப்பு நிலைத்திருக்கும். வெகுசன மக்களின் நடைமுறை வாழ்வியலைக் களமாகக் கொண்டு மு.பழனிசாமி படைத்திருக்கும் இலக்கியங்கள் அனைத்தும் அவர்தம் உள்ளத்துணர்வின் வெளிப்பாட்டுடன் தோன்றியவையாக விளங்குகின்றன.

அவ்விலக்கியங்களில் விழுமியவுணர்வோடு சேர்த்து உறவுநிலை, பண்பாடு, சமூக அவலங்கள், வட்டார நடைமுறைகள் முதலியவையும் இடம்பெற்றுள்ளன. மக்களின் நடைமுறை சிக்கல்கள் பலவற்றையும் புதுமையான கண்ணோட்டத்தில் எடுத்துக்காட்டி அதற்கான தீர்வினை வழங்குவது மு.பழனிசாமி அவர்களின் இலக்கியங்களின் அமைந்த தனித்துவமான சிறப்பாகும். கொங்கு வட்டார மக்களின் வாழ்வியல் மரபுகளை அடியொற்றி மு.பழனிசாமி அவர்கள் படைத்த இலக்கியங்களின் பட்டியல் வருமாறு,

**புதின நூல்கள்**

வெண்ணிலா, நெஞ்சின் குரல், எவரோ என்னவோ சொன்னார், முதலோ முடிவோ, நினைத்தது நடந்தது, காவ்யா, மலையும் மடுவும், மலரும் மங்கையும், பொய்யாமொழி, ஏர் மங்கலம்.

**கவிதை நூல்கள்**

தீரன் சின்னமலை, காலிங்கராயன் காவியம், நோய் நீக்கும் மதுரக்கனிகள், நொடியுடன் ஒரு விளையாட்டு

**உரைநடை நூல்கள்**

மனச்சான்றின் மறுபக்கம், கர்ணன், எமலோகத்தில் திருடன், அர்ச்சுனன்

**வேளாண்மை நூல்கள்**

மரம் வளர்ப்போம், தென்னை வளர்ப்பு, தசகவ்யா, மா, கரும்பு, மூலிகைச்சாகுபடி, மண்ணும் பயிரும், தேனீ வளர்ப்பு, நெல், இயற்கை உரம், வெங்காயம், பூச்சிக் கட்டுப்பாடு, தீவனப்பயிர், இரசாயன உரம், நலம் தரும் கீரை, முருங்கை எலுமிச்சை, பப்பாளி மாதுளை, மலர்ச்சாகுபடி, இலைவழியூட்டம், பந்தல் காய்கறிகள், தர்பூசணி, ஊடு பயிர், கத்தரி வெண்டை, வாழ்விக்கும் வாழை, நுண்ணூட்டம், வீட்டுத்தோட்டம்.

**படைப்புக்களங்கள்**

மனித வாழ்வின் பதிவுகளே படைப்புகளாகத் தோன்றுகின்றன. பூமியில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் நிலமே அடிப்படை ஆதாரம். மனித வாழ்வு நிலத்தையும், பொழுதையும் அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. தமிழ் மக்கள் தாங்கள் வாழ்ந்த பகுதியைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரித்து வாழ்ந்தனர். தொல்காப்பியர் ஐந்திணைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது அந்நிலங்களுக்குரிய கடவுளர்களையும் வரிசைப்படுத்துகிறார். இதை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”**

(**தொல்.பொருள்.அக.நூ**-5)

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. ஐந்திணையானது இயற்கைப் பின்னணியோடும் நிலப்பின்னணியோடும் இணைந்த மக்களின் பாலியல் சார்ந்த உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாகும். ஐந்திணைகளில் நடுவில் உள்ள பாலையைத் தவிர பிற நான்கு திணைகளுக்கும் நிலப்பாகுபாடு வகுத்தமைக்கப்பட்டுள்ளது. பாலைக்குத் தனிநிலம் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் பொழுதுகளாக ஆண்டின் பருவமான வேனிலும், நாளின் பொழுதான நண்பகலும் சொல்லப்படுகின்றன.

நிலம் மற்றும் காலத்தை முதற்பொருளாகவும் நிலத்தில் உருவான அனைத்துப் பொருட்கள் மற்றும் தெய்வங்களைக் கருப்பொருள் என்றும் மானுட வாழ்க்கையின் அமைப்பை உரிப்பொருள் என்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இம்முறையில்,

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்”**

**(குறள் - 1033)**

என்று திருவள்ளுவர் சிறப்பிக்கும் வேளாண் மாந்தர் மிகுந்த கொங்கு வட்டாரப் பகுதிகளையே நாவலாசிரியர் களங்களாக அமைத்துள்ளார். மு.பழனிசாமி இன்றைய கோவை, அவிநாசி, திருப்பூர், பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு போன்ற பகுதிகளையே படைப்பிற்கான களங்களாக்கி மானுட வாழ்க்கையின் சிக்கல்களை மையமாக வைத்துப் நூல்களைப் படைத்துள்ளார். தான் கண்டவை, கேட்டவை, உற்றார் உறவினர், உடன்பழகியவர்கள் என்று அனைத்தையும் கொங்குத்தமிழ் மொழி நடையில் படைப்பாகப் படைத்துள்ளார். இவரது இலக்கியத்தில் அமைந்த பாத்திரங்கள் பெரும்பாலும் கொங்கு வட்டாரப் பகுதிகளிலேயே பயணிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கதைக்களங்கள்**

மு.பழனிசாமி அவர்கள் படைத்த இலக்கியங்கள் கொங்கு வட்டாரக் கதைக் களங்களைக் கொண்டுள்ளன. அத்தோடு, குறிப்பிட்ட சில ஊர்களின் நடைமுறையைப் பின்பற்றியும் அமையப்பெற்றுள்ளன. அவையாவன,

**காவ்யா - பேரூர், சூலூர், மருதமலை, சிங்காநல்லூர், காந்திபுரம்**
**பொய்யாமொழி - திருப்பூர், மேட்டுப்பாளையம், பல்லடம், கருவலூர்**
**ஏர்மங்கலம் - பெருமாநல்லூர், பொள்ளாச்சி, சென்னை, நெகமம், பல்லடம்**
**மலையும் மடுவும் - அவிநாசி**
**நினைத்தது நடந்தது - திருப்பூர், அவிநாசி, சென்னை**
**முதலோ முடிவோ - திருப்பூர், அவிநாசி, சென்னை**

என்பனவாகும். இக்கொங்கு வட்டாரப் பின்புலத்தில் அமைந்த தொழில் முறைகள், பழக்கவழக்கங்கள், மக்களின் சமய, சமுதாய நம்பிக்கைகள், வாழ்வியல் மரபுகள், உறவுநிலை, சடங்குகள் முதலியவை மு.பழனிசாமியின் படைப்பில் கருத்தியல்களாக விளங்குகின்றன.

**படைப்புகளில் அமைந்த கதைமாந்தர்கள்**

படைப்பாளின் மனக்கருத்தைப் பிறருக்கு உணர்த்த துணைநிற்பவர்கள் படைப்புகளில் இடம்பெறும் கதைமாந்தர்களே ஆவர். கதைமாந்தர்கள் வாயிலாக மக்களின் நடைமுறை வாழ்வை அறியலாம். புதின ஆசிரியர் தாம் வாழ்வில் சந்தித்த மனிதர்களையும் அனுபவத்தையும் கதைமாந்தர்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். புதினத்தைப் படித்தவரின் நினைவிலிருந்து நீங்காமல் நிலைபெறுவதற்குக் கதை மாந்தர்களின் படைப்பில் அக்கறை கொள்வது அவசியம். புதினத்தின் வெற்றியில் முக்கியப்பங்கு வகிப்பது கதைமாந்தர் தான். நாம் அன்றாடம் சந்திக்கும் மாந்தர்களே கதைமாந்தர்களாக இடம்பெறும் போது அந்தப்படைப்பு வெற்றி பெறுகிறது. கதையை வாசிப்பவர் தாமும் அக்கதையில் ஓர் அங்கமாக மாறிவிடுகிறார். புதினங்களுக்கு அணிகலன்களாகத் திகழ்பவர்கள் கதைமாந்தர்கள் ஆவர். இதனை,

**“பாத்திரப்படைப்பு காப்பியம் தொடங்கி புதினம், சிறுகதை வரையிலான ஒவ்வொரு இலக்கிய வகைக்கும் உயிர்த்துடிப்பாக அமையும் தன்மையுடையது” என்கிறார் ஹரிவிஜயலட்சுமி – ராஜம்கிருஷ்ணன். (புதினங்களில் பெண்மாந்தர் ஓர் அறிமுகம்.ப.35)**

எனும் கூற்றினைக் கொண்டு உணரலாம். இலக்கியத்தைப் படைக்கும் போது, படைப்பாளர்கள் முதலில் கவனிக்க வேண்டிய கூறு கதைமாந்தர்களேயாகும். கதைமாந்தர்களை உயிரோட்டம் உடையவர்களாக்கி, வேறுபட்ட நடையும் பேச்சும் எண்ணமும் பெற வைத்து, கதையின் வளர்ச்சியிலேயே அவை இணைந்து இழையுமாறு ஆக்கி, கதைப்பின்னலில் தொய்வு ஏற்படாதபடி, இறுக்கமும், ஓட்டமும் நிலவச் செய்வது படைப்பாளர்களின் கடமையாகும். அவ்வகையில் மு.பழனிசாமியின் படைப்புகளில் அமைந்த கதைமாந்தர்கள் உயிரோட்டம் உடையவர்களாகக் கதையின் போக்கிற்குரிய உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளனர். கதைமாந்தர்களைப் படைக்கும் போது மு.பழனிசாமி அவர்கள்,

1. **புறத்தோற்றம்**
2. **அசைவுகள், நடை, நடத்தை, பழக்கம்**
3. **மற்ற கதைமாந்தர்களுடன் கொள்ளும் உறவு**
4. **மற்றவர்களுடன் பேசும் உரையாடல்**
5. **செயல்பாடுகள், பிறருடன் நடந்து கொள்ளும் முறைகள்**
6. **பாத்திரத்தின் பெயர்**
7. **தனக்குத்தானே நடந்து கொள்ளும் விதம்**

ஆகிய முக்கியக்கூறுகளை உள்ளடக்கிப் படைத்துள்ளார்.

தம் படைப்புகளில் நூலாசிரியர் கதைமாந்தர்களின் பண்பினைச் சில இடங்களில் தாமே வெளிப்படுத்திக் காட்டுகிறார். சில இடங்களில் கதைமாந்தர்கள் பேச்சாலும் நடத்தையாலும் வெளிப்படுவதாக அமைத்துள்ளார். இவ்விரு முறையும் இலக்கிய உத்திகளாக மு.பழனிசாமி அவர்களில் படைப்புகளின் அமைந்துள்ளன. மேலும், பெண்களைப் பெரும்பாலான இடங்களில் இன்றியமையாத கதைமாந்தர்களாக எடுத்தாண்டு, மகளிர் சந்திக்கும் சவால்கள் அவர்களின் சமூகப் பொறுப்புகள் பற்றி விளக்கிக்காட்டிப் பெண்ணியச்சிந்தனைக்கும் வித்திட்டுள்ளார். சமூக விமர்சனம், இலக்கிய உணர்வுகள் ஆகியவற்றின் போக்குகள் தோன்றிய காலகட்டத்தில் இவருடைய பதிவுகள் தொடங்குகின்றன.

இக்காலத்திய நூல்களுக்குரிய தன்மையில் புதிய சூழலை உருவாக்கி வருதல், புதிய சூழலில் தனிமனிதன் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் ஆகியவை இவரது படைப்புகளில் இடம்பெற்றுள்ளன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் மாற்றங்களையும் அவற்றை எதிர்கொள்ளும் தனிமனிதர்களின் மன உணர்வுகளையும் இவரது படைப்புகள் மிகுதியாகப் பிரதிபலிக்கின்றன. வெறும் கலை இன்பத்திற்கு மட்டும் நூல்களைப் படைக்காமல் சமூகப்பயனும், தனிமனிதனின் வாழ்வியல் பயணம் கருதிக் கதைக்கருக்களை அமைத்துள்ளார்.

**நிறைவுரை**

இலக்கியப்படைப்பாளர்கள் தம் வாழ்வியல் அனுபவத்தைச் சமூகத்திற்குப் பயனளிக்கும் நோக்கில் படைப்புகளாக வெளிப்படுத்துகின்றனர். இலக்கியத்தை உயிர்ப்புடன் படைத்து அதன்மூலம் சமூகத்தில் நல்லறங்களைப் புகட்டுவது இலக்கியப் படைப்பாளர்களின் பொது இயல்பாகக் காலந்தோறும் இருந்து வருகிறது. படைப்பாளர்கள் தாம் வாழும் சூழலை மையமிட்டு நூல்களைப் படைப்பது இலக்கிய உலகின் பழமையான மரபுகளுள் ஒன்றுதான். சூழலை மையமிட்டு எழுகின்ற படைப்புகளில் வட்டார மரபுகளும் பழக்கவழக்க நடைமுறைகளும் மிகுதியாக இடம்பெறுகின்றன. அந்நோக்கில் கொங்கு வட்டார நடைமுறை மரபுகளைப் பின்பற்றி மு.பழனிசாமி அவர்கள் பற்பல இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். தம் சிறுவயது முதலே தமிழ்மீது கொண்ட மாறாப்பற்றின் காரணமாகத் தமிழ்ப்பயின்று சமூகத்திற்குப் பயனளிக்கும் வகையில், எளிய நடையில் உலகியல் சார்ந்த கருத்தியல்களைப் படைப்புகளாக உருவாக்கியுள்ளார். உறவு நிலை விழுமியங்கள், இயற்கை விவசாயம், விவசாயப் பெருங்குடிகளின் தற்கால வாழ்க்கைச்சூழல், பெண்களின் வாழ்வியல் போராட்டங்கள், ஏற்றத்தாழ்வினால் உண்டாகும் விளைவுகள், சமூக அவலங்கள், கொங்கு வட்டாரச் சடங்கியல்கள், பழக்க வழக்கங்கள், கல்விச்சூழல், சுற்றுச்சூழல், இளைய தலைமுறையினர் நிலைப்பாடு முதலியவை மு.பழனிசாமியின் படைப்புகளில் கருப்பொருள்களாக அமைந்துள்ளன. கொங்கு வட்டார மொழிநடையுடன் கூடிய உரையாடல்கள் அவரது படைப்புகளுக்கு வழு சேர்க்கின்றன. கதைக்களத்தை அமைக்கின்ற பாங்கு, கதைமாந்தரை அறிமுகம் செய்யும் போது எடுத்தாளுகின்ற இலக்கிய உத்திகள் என மு.பழனிசாமியின் படைப்புகள் இலக்கியச் செறிவுடன் திகழ்கின்றன. கொங்கு வட்டாரப் படைப்பாளுமைகளுள் ஒருவராய் விளங்கி, தமிழுக்கு அணிசேர்க்கும் விதமாக இன்றளவும் இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்து சமூகத்தின் வளர்ச்சிக்கு மு.பழனிசாமி அவர்கள் துணைநின்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.